**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 56/2016**

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.1 மணிகண்டன் , வயது 38, த/பெ சாமிக்கண்ணு

**குறுக்கு விசாரணை ( 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு)**

**மனு அனுமதிக்கப்பட்டு PW1 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

1ம் பிரதிவாதி சாமிக்கண்ணு என் தந்தை என்றால் சரிதான். அவர் இவ்வழக்கு நிலுவையில் உள்ள போது இறந்து விட்டார் என்றால் சரிதான். அவருக்கு வாரிசுதாரர்களாக குமாரி, குப்பு இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி குமாரி என் தாயார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி குப்பு என் அக்கா என்றால் சரிதான். நானும் என் தாயார் குமாரியும் சேர்ந்து ஒரே வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அவ்வாறு சேர்ந்து வசித்தால் ஏன் 5ம் பிரதிவாதியாக என் தாயாரை சேர்க்க காரணம் என்ன என்றால் சாட்சி பலமுறை கேள்வியை கேட்டும் எனக்கு புரியவில்லை என்று கூறுகிறார்.

2. எனக்கும் 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கும் இடையே எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கை எந்த சொத்திற்கு எவ்வளவு அளவிற்கு போடப்பட்டுள்ளது என்றால் என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள நிலமான 38 செண்ட்டிற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் குப்பன், ஏழுமலை, சுப்பராயன் ஆகியோர் சேர்ந்து என்னை மேற்படி இடத்திலிருந்து காலி செய்ய வேண்டும் என்று சொன்னதால் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3. இவ்வழக்கில் குப்பன், ஏழுமலை, சுப்பராயன் ஆகியோர் சேர்ந்து என்ன பதிலுரை தாக்கல் செய்தார்கள் என்றாலும், அதை நான் படித்து பார்த்தேனா என்றால் தெரியாது. என் தந்தை எனக்கு 25.04.2013 அன்று தான செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அப்போது எனக்கும் என் தந்தைக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மென்ட் அசல் பத்திரம் என் வசம் உள்ளதா என்றால் என் வீட்டில் அசல் பத்திரம் உள்ளது.

3. மேற்படி அசல் பத்திரம் என் வசம் உள்ளது என்று நான் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை. வா.சா.ஆ.1 தான செட்டில்மென்டை என்னிடம் அசல் இருப்பினும், நான் பதிவு நகலாகதான் தாக்கல் செயதுள்ளேன் என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் பத்திரமான வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பமாக 5ம் பிரதிவாதி குமாரி கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தை என் தந்தை எனக்கு எழுதி வைத்த விவரம் 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் 5ம் பிரதிவாதிக்கு தெரியும், 6ம் பிரதிவாதியான குப்புவிற்கு தெரியாது.

4. 6ம் பிரதிவாதி சேலத்தில் இன்றைய தேதியிலிருந்து 15 வருடத்திற்கு முன்பிருந்து வசித்து வருகிறார். குப்புவிற்கு 15 வருடத்திற்கு முன்பு திருமணம் முடிந்து விட்டது என்றால் சரிதான். இன்றைய தேதிவரை குப்பு பெயர் எங்கள் குடும்ப அட்டை வா.சா.ஆ.2ல் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார், அது பழைய குடும்ப அட்டையாகும் என்று கூறினார். புது குடும்ப அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் அதில் குமாரி மற்றும் குப்பு பெயர் உள்ளதா என்ற விவரம் தெரிந்திருக்குமா என்றால் தெரிந்திருக்கும்.

7. 2 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 20.11.2013ல் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் எ.ம.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் கிரையம் கொடுத்து அதற்கு கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரியல்ல, சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு வாக்காளர் அடையாள அட்டை மற்றும் அதில் உள்ள கையொப்பமும் என்னுடையதுதான் என்று கூறினார்.

8. 20.11.2013 அன்று நான் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு என் தந்தை எனக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் முன்னிலைக்கு அவர்களுக்கு கிரையம் கொடுத்ததை மறைத்து இவ்வழக்கை பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஏற்கனவே மனு எண். 213/2016 எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் எ.ம.சா.ஆ.2 ல் சாட்சி கையெழுத்தில் என் தந்தை கையொப்பமிட்டார் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார்.

9. தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கையொப்பம் என் தந்தையுடையது என்றால் சரிதான். சாட்சியிடம் தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் கிரைய பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பமான என் தந்தையின் கையொப்பம் இரண்டும் ஒன்றாக உள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு 2 கையொப்பமும் 1தான் என்று கூறினார். ஆகையால் பிரதிவாதிகள் 2 முதல் 4 முன்னிலையில் சொத்துக்கள் அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து என் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதுவுமில்லை. மனு எண். 213/2016 இடைக்கால மனு நான் தாக்கல் செய்து விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இன்றைய தேதியில் தாவா சொத்திற்கான பட்டா 2 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றாலும், அது எ.ம.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சுப்புராயன், குப்பன், ஏழுமலை மற்றும் என் அப்பா பெயரில் உள்ளது என்று கூறினார்.

11. என் தந்தை பெயரில் பட்டா உள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த சொத்திற்காக விளம்புகை பரிகாரம் கேரி தாக்கல் செய்த இவ்வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் இல்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்ட சொத்திற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் தெரியவில்லை.

12. இவ்வழக்குடன் சேர்ந்து அசல் வழக்கு எண். 129/2017 என்ற வழக்கில் நான் எதிர்தரப்பினர் என்றாலும், மேற்படி வழக்கும், இவ்வழக்கும் சேர்ந்து நடக்கிறது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அசல் வழக்கு எண். 129/2017 என்ற வழக்கை எதிர்த்து எந்த சங்கதிகளையும் சொல்லி (joint trial) பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13. எனக்கு உரிமையில்லாத சொத்திற்கு தாக்கல் செய்த இவ்வழக்கை தள்ளுபடி செய்து அசல் வழக்கு எண்.129/2017 வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால் எனக்கு தெரியாது.

**2 முதல் 4 வரையான பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை முடிவடைந்தது**.

**நேரம் - 1.15**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni